www.Padasalai.Net www.CBSEtips.in

| இரண்டாம் இடைப்பருவத் தேர்வு - 2023 | Reg. No. |
|---|---|
| VII - தமிழ் | |
| நேரம் : 1.30 மணி | மதிப்பெண்கள் : 30 |

I. கீழ்காணும் வினாக்களுக்குச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 5 x 1 = 5

1. தூண் என்னும் பொருள் தரும் சொல் ________.

அ) ஞெகிழி ஆ) சென்னி

இ) ஏணி ஈ) மதலை

2. மக்கள் ________ ஏறி வெளிநாடுகளுக்குச் சென்றனர்.

அ) கடலில் ஆ) காற்றில்

இ) கழனியில் ஈ) வங்கத்தில்

3. தொல்காப்பியம் கடற்பயணத்தை ________ வழக்கம் என்று கூறுகிறது.

அ) நன்னீர் ஆ) தண்ணீர்

இ) முந்நீர் ஈ) கண்ணீர்

4. எதுகை இடம்பெறாத இணை ________.

அ) இரவு - இயற்கை ஆ) வங்கம் - சங்கம்

இ) உலகு - புலவு ஈ) அசைவு - இசைவு

5. பல பொருள் தரும் ஒரு சொல் என்பது ________.

அ) இயற்சொல் ஆ) திரிசொல்

இ) திசைச்சொல் ஈ) வடசொல்

II. அடி மாறாமல் எழுதுக. 1 x 3 = 3

6. 'வானம் ஊன்றிய' எனத்தொடங்கும் கலங்கரை விளக்கம் பாடலை எழுதுக.

III. ஓரிரு வரிகளில் விடை தருக. 5 x 2 = 10

7. மரக்கலங்களைத் துறைமுகம் நோக்கி அழைப்பது எது?

8. நாவாய் ஓட்டிகளுக்குக் காற்று எவ்வாறு துணை செய்கிறது?

9. தோணி என்னும் சொல்லின் பெயர்க்காரணத்தைக் கூறுக.

10. குங்குமம், கமலம் என்பன எவ்வகை வடசொற்கள்?

11. கப்பல் கட்டும் போது மரப்பலகைகளுக்கு இடையே தேங்காய் நார் (அ) பஞ்சு வைப்பதன் நோக்கம் என்ன?



www.Padasalai.Net
Scanned with OKEN Scanner
Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

**IV. குறிப்புகளைக் கொண்டு 'மா' என்னும் எழுத்தில் தொடங்கும் சொற்களைக் கண்டறிந்து எழுதுக.** **3 x 1 = 3**

12. கதிரவன் மறையும் நேரம் ________.

13. எழுத்துகளை ஒலிக்க ஆகும் கால அளவு ________.

14. முக்கனிகளுள் ஒன்று ________.

**V. பொருத்தமான காலம் அமையுமாறு திருத்தி எழுதுக.** **5 x 1 = 5**

15. மாடுகள் இப்பொழுது புல் மேயும்.

16. கண்மணி நாளை பாடம் படித்தாள்.

17. ஆசிரியர் நாளை சிறு தேர்வு நடத்தினார்.

18. அமுதன் நேற்று வீட்டுக்கு வருவான்.

19. நாங்கள் நேற்று கடற்கரைக்குச் செல்கிறோம்.

***VI. கலைச்சொல் எழுதுக :*** **4 x 1 = 4**

20. அ) Ocean

ஆ) Storm

இ) Harbour

ஈ) Submarine



Scanned with OKEN Scanner
Kindly send me your study materials to padasalai.net@gmail.com
www.Padasalai.Net